சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை

முன்னிலை: திரு. ஜே.கே. திலீப், பி.ஏ., பி.எல்.,
சார்புநீதிபதி, ஊத்தங்கரை

2020-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாள் செவ்வாய் கிழமை

**அசல் வழக்குஎண்: 08/2020**

C. வேடியப்பன் ..வாதி

/எதிராக/

G. ரவிச்சந்திரன் ..பிரதிவாதி

இவ்வழக்கானது 09.11.2020-ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சசிக்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தானே ஆஜராகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தாலும், பிரதிவாதியை தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்:

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதென்றும், தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி பெயரில் போச்சம்பள்ளி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.1184/2017 கொண்ட 16.06.2017-ம் தேதிய கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யவும், தாவா சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி வாதியின் ஒப்படைக்க கோரியும், அவ்வாறு பிரதிவாதி ஒப்படைக்க தவறும் பட்சத்தில் இந்நீதிமன்றமே தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்கக் கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவுக்காகவும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. தாவா பிராதின் சுருக்கம்:**

தாவா சொத்தும் இதர சொத்துக்களும் வாதியின் தந்தை சின்னசாமி செட்டியாருக்கு சுயார் ஜிதமாய் பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வரும் சொத்துக்களாகும். மேற்படி தாவா சொத்துக்களை வாதிக்கும் மற்றும் இதர சொத்துக்களை வாதியின் தம்பி ஞானசேகரன்

என்பவருக்கும் வாதியின் தந்தை அவரது சுய விருப்பப்படி நல்ல மனநிலையில் கடந்த 07.12.1994-ம் தேதியன்று உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், மேற்படி ஆவணம் போச்சம்பள்ளி சார்பதிவகத்தில் ஆவண எண்.45/1994 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாதியின் தந்தை கடந்த 03.11.2003-ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், மேற்படி வாதியின் தந்தையின் இறப்பிற்கு பின்னிட்டு உயில் ஆவணம் அமுலுக்கு வந்தது முதல் தாவா சொத்துக்களை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும், மேற்படி தாவா சொத்துக்களில் வாதியின் அனுபவத்தை பொறுத்து அவரது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்துக்களில் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையோ அனுபவமோ கிடையாது என்றும், பிரதிவாதி அ.இ.அ.தி.மு.க கட்சியில் முன்னால் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் என்றும், தாவா சொத்துக்களை பிரதிவாதிக்கு விற்றுவிடும்படி வாதியை மிரட்டியதாகவும், அதற்கு வாதி மறுத்துவிட்டதால் பிரதிவாதி அவரது ஆட்களுடன் தாவா சொத்துக்களில் வாதியின் அனுபவத்தை பலவகையில் இடையூறு செய்து வந்துள்ளார்.

(2-2) மேற்படி பிரதிவாதியின் செயல்கள் குறித்து வாதி காவல்துறையினரிடம் புகார் கொடுத்தும் யாதொரு பலனும் இல்லையென்றும், இதனை பிரதிவாதி அவருக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுகடந்த 15.07.2013-ம் தேதியில் அவரது ஆட்களுடன் தாவா சொத்துக்களில் வாதிக்கு இருக்கும் பாத்தியத்தை மறுத்து அத்துமீறி நுழைய முற்பட்டதாகவும், அதன் காரணமாக வாதி கிருஷ்ணகிரி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.54/2013 தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் பிரதிவாதி வழக்கு சொத்தை பொறுத்து வாதி பிரதிவாதி பெயருக்கு கடந்த 1996-ம் ஆண்டிலேயே ரூ.5,00,000/-க்கு விற்பனை செய்ய உட்பட்டு சுவாதீனத்தையும் பிரதிவாதியின் வசம் ஒப்படைத்துவிட்டதாக எதிர்வியாஜ்ஜியம் செய்து வந்ததுடன் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வாதிக்கு எதிராக அசல் வழக்கு எண்.272/2014 தாக்கல் செய்துள்ளதாகவும், அதன் பின்பு இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரணை செய்யக் கோரி வாதி TR.O.P.No. 1/2015 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு அசல் வழக்கு எண்.54/2013 வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அசல் வழக்கு எண்.86/2015 என மறு எண்ணிடப்பட்டு நிலுவையில் இருந்து வந்தது என்றும், அதனை பின்னிட்டு இருவழக்குகளிலும் வாதி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வழக்கு விசாரணை குறித்து வாதிக்கு உரிய தகவல் கொடுக்காததால் மேற்படி அசல் வழக்கு எண்.272/2014 வழக்கில் கடந்த

24.03.2015-ம் தேதியன்று வாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டும், அசல் வழக்கு எண்.86/2015-ல் வாதி ஆஜரின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டது.

(2-3) இதனை பிரதிவாதி அவருக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரி நிறைவேற்று மனு எண்.13/2016 தாக்கல் செய்து, மேற்படி மனுவில் இந்நீதிமன்றத்தின் மூலம் 16.06.2017-ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை எழுதி பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் மேற்படி கிரைய ஆவணத்தில் நீதிபதி 20.06.2017-ம் தேதியில் கையெழுத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஆவணத்தை மூலமாக கொண்டு பிரதிவாதி கடந்த 2017-ம் ஆண்டு ஜீலை மாதம் முதல் வாரத்தில் தாவா சொத்துக்களை சட்டத்திற்கு முரணாக ஆக்கிரமித்து கொண்டதாகவும், அதன்பிறகு விசாரித்தபோது தான் நீதிமன்ற உத்தரவுகள் குறித்து வாதிக்கு தெரிய வந்தது என்றும், அதனை பின்னிட்டு வாதி அசல் வழக்கு எண்.272/2014 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, மேற்படி வழக்கு கடந்த 30.08.2017-ம் தேதியில் விசாரணைக்கு வாய்தா போடப்பட்டதில் பிரதிவாதி வழக்கு விசாரணையை பிரதிவாதி மேற்கொள்ளாததை அடுத்து 31.08.2017-ம் தேதியில் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனவே, மேற்படி பிறப்பிக்கப்பட்ட 24.03.2015-ம் தேதிய ஒருதலைபட்ச தீர்ப்பாணையை அனுசரித்து பெறப்பட்ட 16.06.2017-ம் தேதியிட்டதும், போச்சம்பள்ளி சார்பதிவக அலுவலக பதிவு எண் கொண்ட கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், எனவே, வாதி தாவாவில் கோரியுள்ளவாறு விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் வழங்கி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிக்கு முறைப்படி அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தானே ஆஜராகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டார்.

4). வாதி தரப்பில் வாதி வா.சா.1-ஆகவும், பாண்டியன் (எ) பாண்டுரங்கன் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

5. வாதி தாவாவில் கூறியுள்ள சங்கதிகளையே வா.சா.1 தன் தரப்பு சாட்சியத்திலும் தெரிவித்துள்ளார். மேலும் தன் தரப்பு வழக்குக்கு ஆதரவாக தாவா சொத்துக்களை பொறுத்து

வாதி பெயருக்கு அவரது தந்தை எழுதி கொடுத்துள்ள 07.12.1994-ம் தேதிய உயில் ஆவணம் அசல் வா.சா.ஆ.1-ஆகவும், தாவா சொத்துக்களுக்கு வாதி பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் (எண்ணிக்கை 3) வா.சா.ஆ.2 ஆகவும், அசல் வழக்கு எண்.54/2013 வழக்குரையின் நகல் வா.சா.ஆ.3 ஆகவும், அசல் வழக்கு எண்.54/2013-ன் எதிர்வழக்குரையின் சார்பு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும், அசல் வழக்கு எண்.272/2014-ன் வழக்குரையின் சார்பு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், அசல் வழக்கு எண்.272/2014-ன் எதிர்வழக்குரையின் சார்பு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், இடைநிலை மனு எண்.145/2017 இன் அசல் வழக்கு எண்.272/2014 மனுவின் நகல் வா.சா.ஆ.7 ஆகவும், அசல் வழக்கு எண்.272/2014-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகவும், அசல் வழக்கு எண்.272/2014-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகவும், அசல் வழக்கு எண்.86/2015-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆகவும், அசல் வழக்கு எண்.86/2015-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகவும், பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட 16.06.2016-ம் தேதிய கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

6. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1-ஐ பரிசீலனை செய்கையில் தாவா சொத்துக்களை வாதியின் தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்து, மேற்படி வாதியின் தந்தை வாதிக்கு முழு மனதுடன் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், வா.சா.ஆ.1-ல் கண்ட சொத்துக்களை வாதி வாரிசு அடிப்படையில் சுவாதீனம் அடைந்து அனுபவித்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. மேலும் தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்பது தெரிய வருகிறது. எனவே தாவா சொத்துக்களில் வாரிசுரிமை அடிப்படையில் உரிமை உள்ளது என்று வாதி கோரும் விளம்புகை மற்றும் மேற்படி சொத்துக்களின் சுவாதீனம் பிரதிவாதி வாதிக்கு ஒப்படைக்க கோரும் பரிகாரம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ளது என்பதை வாதி தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதி தாவாவில் கூறியுள்ள சங்கதிகளை மறுக்கும் விதத்தில் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவர்களது தரப்பினைத் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி அவரது தரப்பினைத் தெரிவிக்காத நிலையில் வாதி

தாவாவில் கூறியுள்ள சங்கதிகளை வா.சா.1 மற்றும் வா.சா.2-ன் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

. **7. முடிவாக, தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதென்றும்,**

**(2) தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி பெயரில் போச்சம்பள்ளி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.1184/2017 கொண்ட 16.06.2017-ம் தேதிய கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும், (3) தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒருமாத காலத்திற்குள் பிரதிவாதி வாதியிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 24.11.2020-ஆம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- திரு. ஜே.கே. திலீப். பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை

<u>வாதி தரப்பு சாட்சி:</u>

1. வா.சா. 1 .. வேடியப்பன் (வாதி)
2. வா.சா. 2 -- பாண்டியன் (எ) பாண்டுரங்கன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:

வா.சா.ஆ.1 .. தாவா சொத்துக்களை பொறுத்து வாதி பெயருக்கு அவரது தந்தை எழுதி கொடுத்துள்ள 07.12.1994-ம் தேதிய உயில் ஆவணம் அசல்

வா.சா.ஆ.2 .. தாவா சொத்துக்களுக்கு வாதி பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் (எண்ணிக்கை 3)

வா.சா.ஆ.3 .. அசல் வழக்கு எண்.54/2013 வழக்குரையின் நகல்

வா.சா.ஆ.4 .. அசல் வழக்கு எண்.54/2013-ன் எதிர்வழக்குரையின் சார்பு செய்யப்பட்ட நகல்

வா.சா.ஆ.5 .. அசல் வழக்கு எண்.272/2014-ன் வழக்குரையின் சார்பு செய்யப்பட்ட நகல்

வா.சா.ஆ.6 .. அசல் வழக்கு எண்.272/2014-ன் எதிர்வழக்குரையின் சார்பு செய்யப்பட்ட நகல்

வா.சா.ஆ.7 .. இடைநிலை மனு எண்.145/2017 இன் அசல் வழக்கு எண்.272/2014 மனுவின் நகல்

வா.சா.ஆ.8 .. அசல் வழக்கு எண்.272/2014-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல்

வா.சா.ஆ. 9 .. அசல் வழக்கு எண்.272/2014-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.10 .. அசல் வழக்கு எண்.86/2015-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல்

வா.சா.ஆ. 11 .. அசல் வழக்கு எண்.86/2015-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.12 .. பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட 16.06.2016-ம் தேதிய கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்

ஒம்/- திரு. ஜே.கே. திலீப். பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை